கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – III – 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

LIBRARY
Eastern University, Sri Lanka

**SOCS 4101 அரசு, மற்றும் இன முரண்பாடு தொடர்பான மானிடவியல் அணுகு முறைகள்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி – I இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் பகுதி – II இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்கும் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

---

## பகுதி – I

01.(அ) அரசியல் சமுதாயம் என்பதை மக்ஸ்வெபர் (Max Weber) எவ்வாறு வரையறை செய்கின்றார்?

(05 புள்ளிகள்)

(ஆ) உறவு முறைக் குழுக்களையும் பலப்பிரயோகத்தினையும் அரசியல் சமுதாயத்தின் அடிப்படையாகக் கொள்ள முடியாது என்பதற்கு ஷபரா (I.Schapera) முன்வைக்கும் கருத்துக்களை விபரிக்குக.

(20 புள்ளிகள்)

02.(அ) பன்மைவாதிகளின் அதிகாரம் பற்றிய கருத்துக்களில் இருந்து பார்சன்ஸ் (Talcott Parsons) வேறுபடும் தன்மையினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) அதிகாரத்தினை மையமாகக் கொண்டு சமூகக் கட்டமைப்பில் முரண்பாடுகள் தோன்றும் விதம் குறித்து டறன் டோப் (Ralf Dahrendorf) கூறிய கருத்துக்களை விபரிக்குக.

(15 புள்ளிகள்)

03.(அ) இனத்துவத்தில் உள்ளடங்கும் பரிமாணங்களைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) இனத்துவத்தின் பரிமாணங்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் தன்மையினை எடுத்துக் காட்டுகளுடன் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

04.(அ) அரசுகளின் வீழ்ச்சியின் (state Failure) போக்கில் ஏற்பட்ட மாறுபாட்டினை வரலாற்று ரீதியில் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) வீழ்ச்சியடைந்த அரசுகளை மீளக் கட்டமைப்பதில் தேசிய அரசு மாதிரியைக் கையாள்வதில் காணப்படும் இடர்பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

## பகுதி – II

05. "எல்லாச் சமூகங்களும் அரசாங்கங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அனைத்துச் சமூகங்களும் அரசியல் முறைமையைக் கொண்டிருக்கின்றன." இக்கூற்றினை மானிடவியலாளர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)

06. உலக மயமாக்கலின் முகவர்களாக மனிதாபிமான உதவி ஸ்தானங்கள் அரசொன்றின் இறைமையில் ஏற்படுத்தும் தாக்கத்தினை எடுத்துக் காட்டுகளின் துணைகொண்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

**********